No: 27, Jeeva Street, Muthirayarpalayam, Pondicherry 605009, INDIA

**ஓம் ஈஸ்வராய நமஹ!**

## மூன்றாம் நிலை தீட்சையை பற்றி முருகப்பெருமான் உரைத்தது. தீட்சை வழங்கப்படும் நாட்கள்: 02 Feb 2020, 08 March 2020, 05 April 2020.

**எங்களது இணையத்தளத்தில் முன்பதிவு அவசியம் : http://enlightenedbeings.org/**

யாம் அளித்திட்ட இரு தீட்சைகளும் மாயைத் திரையினை விலக்கிடவும், கர்மத் திரையினை விலக்கிடவுமே வழிவகுத்திட்டன. சூடேற்றிக் குளிர்வித்தல் என்பது மாயத் திரைகளை மாத்திரமே தீண்டவல்லது என்றும் மூன்றாம் நிலை தீட்சை ஒன்றே ஆணவத்திரையினை தொடவல்லது. இதன் சூட்சமங்கள் யாவும் உணரப்படல் வேண்டும். இருநிலை தீட்சைகளும் நிறைவுற்ற நிலையில் மூன்றாம் நிலை தீட்சையினை அன்னையானவர் சூட்சமமாய் உணர்ந்து கொண்டார். அதன் தாத்பர்யங்களை உணர்ந்து கொண்டே அன்னை செயலாற்றினார்.

யாம் அளித்திடும் மூன்றாம் நிலை தீட்சையினைக் குறித்து பின்னர் விளக்கமாய் யாம் உரைத்திடுவோம்.

ஏற்றிட்ட தீட்சைகளைக் குறித்தே யாம் எடுத்துரைத்தோம். பலரும் மாயத் திரையினை நீக்கி கர்ம திரையினை அடைந்திட்டனர் என்றும் பின்னரே அவை பயின்றிடப் பயின்றிட விலகிடும் என்றுமே உணர்தல் வேண்டும். முன்றாம் நிலை தீட்சை என்பது பக்குவ நிலையினை எய்திட உதவிடும். ஆணவத் திரையினை நீக்கியருள வேண்டும் என்றே பிரார்த்தனைகள் புரிந்து தீட்சைகளை ஏற்றிட்டாலும் அவை ஆணவத் திரையினை தீண்டிட வல்லது அல்ல என்றுணர்க. அகத்திய மகானை ஏற்று ஆணவத்திரையினை அழித்திட பிரார்த்தனைகள் புரிந்திட்ட காரணத்தினால் மூன்றாம் நிலை தீட்சையில் அவை உணர்த்தப்படும், விளக்கப்படும்.

மானுட ஆன்மாக்களை ஈர்த்திட யாம் உரைப்பது ஒன்றே பலனளித்திடும். ஆணவத் திரையினை நீக்கிட மூன்றாம் நிலை தீட்சை அளிக்கப்படும் என்றும் முதல் இரண்டு திரைகளை விலக்கிட தீட்சைகளை பெறாத மானுடர்களும் முன்றாம் தீட்சையினை ஏற்றுவிட்டால் மாயையும், கர்மமும் ஒருசேர விலகிடும் என்றே தீர்க்கமுற உரைத்திடுங்கள்.

ஆணவத்திரை விலகிட ஏற்கப்படும் தீட்சையானது பயின்றிடப் பயின்றிட உயர் நிலைகள் சித்திக்கவே வழிவகுக்கும் மூளையின் உட்சென்று ஒவ்வொரு உறுப்புகளையும், துகள்களையும் கண்டிடவும் வழிவகுக்கும். மூன்றாம் நிலை தீட்சை ஒன்றே விழித்திரைகளை முழுமையாக விலக்கிட உதவிடும். உட்காட்சிகளும் புலப்படும். மானுட ஆன்மாக்கள் தெளிவுற அறிந்திட இதனை விளக்கமாக எடுத்துரைப்பது மிகுந்த பலனை நல்கிடும்.

மூன்றாம் நிலை தீட்சை என்பது அகத்தியரால் நீக்கப்படும் திரையினை உணர்த்துவதால் உட்காட்சிகளும் புலப்படும் உயர் ஆன்மா ஒளி வீசிடும் நிலையும் உணரப்படும். உள் விழிகள் திறவு கொண்டு விழிகளிலே நிலைத்துள்ள துகள்கள் உட்புறம் பயணித்தால் ஏழாம் திரையும் அதனை உணர்ந்து கரையத்துவங்கிவிடும்.

சூட்சமதிரைகள் என்றே உணர்த்தப்பட்ட ஏழு திரைகள் யாவை என்பதுவும் அதனை எவ்விதம் நீக்கிடல் வேண்டும் என்றும் தேவியர்கள் உணர்த்திடுவர்.

அன்னையானவர் தனது விழியின் மூலம் பகிர்ந்திட்ட ஆற்றல்களும் மானுட ஆன்மாக்களைத் தூண்டியது. அன்னையே எழுச்சியுறும் மார்க்கமும், மலர்ச்சியுறும் யுகமும் எங்களது விழிகளுக்கு புலப்படுகின்றது என்றும் நீங்கள் அனைவரும் அதனை வெகு விரைவில் உணர்வீர்கள் என்றும் ஏற்றிட்டு ஈசனைப் பணிந்து உயர் நிலைகளை எய்திடுங்கள்.

**அருளியவர்**
**முருகப்பெருமான்**